# மனுசாஸ்திரம்

**சூத்திரர்கள் அனைவரும் பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள்**

சூத்திரன் என்பவன் ஏழுவகைப்படம். 1. யுத்தத்தில் புறங்காட்டி ஓடுபவன் 2. யுத்தத்தில் கைதியாகப் பிடிக்கப்பட்டவன் 3. பிராமணனிடத்தில் பக்தியினால் ஊழியஞ்செய்பவன் 4. விபச்சாரி மகன் 5. விலைக்கு வாங்கப்பட்டவன் 6. ஒருவனால் கொடுக்கப்பட்டவன் 7. தலைமுறை தலைமுறையாக ஊழியஞ்செய்கிறவன். *-அத்தியாயம் 8: ஸ்லோகம் 415*

**ஊர் – சேரிப் பிரிவினை**

இவர்கள் ( தாழ்த்தப்பட்டோர் ) அனைவரும் பட்டணத்திற்கும், ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, சுடுகாட்டிற்கு அருகில் உள்ள இடம், மலைப்பூந்தோட்டம் இவைகளில், அனைவருக்கும் இவர்கள் இன்ன தொழிலாளிகள் என்று தெரியும்படி தன் தன் தொழிலைச் செய்துகொண்டு வாழசெய்யவேண்டியது.
*அத்தியாயம்10 : ஸ்லோகம் 50*

சண்டாளனுக்கு ஊருக்கு வெளியில் வீடு இருக்கவேண்டும். அவர்களுக்கு உலோக பாத்திரங்கள் கூடாது. அவர்கள் தீண்டிய பாத்திரங்களைச் சுத்தம் செய்தாலும் பரிசுத்தமாகாது. அவர்கள் நாயும், கழுதையும் வளர்க்கலாம். அனால் மாடு முதலியவற்றை வளர்த்து வாழக்கூடாது. *அத்தியாயம்10 : ஸ்லோகம் 51*

**பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சொத்துசேர்க்கக்கூடாது**

சூத்திரன் பொருளீட்டத்தக்கவனே ஆயினும் அவன் தனது தேவைக்கு மேலாகப் பொருள் சேர்க்கக்கூடாது. அடிமை போன்ற அவன், பொருள் சேர்த்துப் பணக்காரனாக மாறினால் தற்பெருமைக்குரியனாவான். தனது அகங்காரத்தால் அல்லது அலட்சியத்தால் பிராமணனுக்கு அவன் துன்பம் இழைப்பான்.
*அத்தியாயம்10 : ஸ்லோகம் 129*

**பெண்கள் துரோகிகள்; பெண்களைக் கொல்லுவது பாவமில்லை**

படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவற்றினை மாதர் பொருட்டே மனுவானவர் கற்பித்தார். *அத்தியாயம்9 : ஸ்லோகம்17*

பெண்களையும், பிராமணர் அல்லாதவரையும் கொல்லுவது பாவமில்லை.*-அத்தியாயம்11 : ஸ்லோகம் 65*

**விவசாயம் செய்யக்கூடாது**

சிலர் பயிரிடுதலை நல்லதொழிலென்று நினைக்கிறார்கள். அந்தப் பிழைப்பு பெரியோர்களால் நிந்திக்கப் பட்டது. ஏனெனில் இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும், மண்வெட்டியும் பூமியையும், பூமியிலுண்டான பலபல ஜந்துக்களையும் வெட்டுகிறதல்லவா? *- அத்தியாயம்10 : ஸ்லோகம் 84*

**பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் படிக்கக்கூடாது**

சூத்திரன் மனப்பாடம் பண்ணும் நோக்கத்துடன் வேதம் படிப்பதைக் கேட்டால், அவனது காதுகளில் காய்ச்சிய ஈயத்தையும், அரக்கையும் ஊற்றவேண்டும். அவன் வேதம் ஓதினால் ஓதும் நாக்கு துண்டிக்கப்பட வேண்டும். வேதத்தில் முழுத்தேர்ச்சி அடைந்தால் அவனது உடம்பு துண்டு துண்டாக வெட்டிச் சிதைக்கப்படவேண்டும். *-அத்தியாயம்12 : ஸ்லோகம்4*

# மனு சாஸ்திரத்தை எரிப்பதற்கு முன் தோழர்கள் எடுக்க வேண்டிய உறுதிமொழி

- ♦ நாங்கள் சமுதாயத்தை இழிவுபடுத்தும் நான்கு வர்ண கோட்பாடுகளை எதிர்ப்பவர்கள்.

- ♦ அதனடிப்படையில் உருவான ஜாதி - தீண்டாமை - பெண்ணடிமையை மறுப்பவர்கள்.

- ♦ இந்த சமுதாய ஒடுக்குமுறையை சமுகத்தின் சட்டமாக்கிய மனுசாஸ்திரமும் - அதன் சிந்தனைகளும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக மனு சாஸ்திரத்தை எரிக்கிறோம்.

- ♦ சமூக சமத்துவம் மலரும்வரை இந்த மனு சாஸ்திர சிந்தனைகளை எதிர்த்துப் போராடுவோம் என்று உறுதி ஏற்கிறோம்.

- ♦ மடியட்டும் மனு சாஸ்திரம்!

- ♦ வெல்லட்டும் மனித சமத்துவம்!